# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 101 | வியாழக்கிழமை Thursday | 09.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode


# கிராமங்களில் உள்ள மக்களுக்கு அனைத்து திட்டங்களும் சென்றடைய வேண்டும்

## முதலமைச்சர் விஜய் உத்தரவு



தமிழகத்தின் 12-வது முதல்-அமைச்சராக, த.வெ.க.தலைவர்ஜோசப் விஜய் கடந்த மே மாதம் 10-ந் தேதி பதவியேற்றார். அன்று முதல் ஒவ்வொரு நாளும் அரசுப் பணிகவனித்து வருகிறார். தற்போது, 2026-2027-ம் ஆண்டுக்கான பட்ஜெட் தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள அவர், தினமும் ஒவ்வொரு துறைகளின் அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார்.

முதலமைச்சர் விஜய் தலைமையில் நடந்த சமூக நீதித்துறையின் ஆலோசனைக் கூட்டத்தில், ஆணவக் கொலை தடுப்புச் சட்டம் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த மாத இறுதியில் தமிழக பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், பட்ஜெட்டில் இடம் பெற வேண்டிய புதிய திட்டங்கள், நடைபெற்று வரும் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் துறைகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக, முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் துறைவாரியான ஆலோசனைக் கூட்டம் தினந்தோறும் நடைபெற்று வருகிறது.

ஜூலை 2 ஆம் தேதி தொடங்கிய இக்கூட்டம் ஜூலை 22 வரை நடைபெற உள்ளது. நேற்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறைமற்றும்சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்த கூட்டம் நடைபெற்ற நிலையில், இன்று சமூக நீதித் துறையின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் விஜய் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், துறைசார்ந்த அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர். அதில், வரவிருக்கும்நிதிநிலைஅறிக்கையில் சமூகநீதித்துறை தொடர்பான புதிய அறிவிப்புகள் இடம்பெறுவது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும், சமூக நீதித்துறை சார்பில் செயல்பட்டு வரும் பள்ளிகள், மாணவர் விடுதிகள் மற்றும் அவற்றின் நிர்வாகம், பராமரிப்பு, அடிப்படை வசதிகள் உள்ளிட்ட அம்சங்களும் ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பட்டன.


குறிப்பாக,விடுதிகளில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்து மாணவர்களிடமிருந்துதொடர்ந்து எழுந்து வரும் புகார்கள் தொடர்பாக விரிவான விவாதம் நடைபெற்றதாக தகவல் வெளியாகியுள்ளது. மாணவர்களுக்கு தரமான உணவு மற்றும் சிறந்த வசதிகளை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளுடன் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ஒதுக்கும் நிதியை முழுமையாகவும், பயனுள்ளதாகவும் பயன்படுத்துவது குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ளதிட்டங்கள்,ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள திட்டங்களின் முன்னேற்றம் உள்ளிட்ட விவரங்களும் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டன.

அதன்படி, கிராமங்களில் உள்ள மக்களுக்கு அனைத்து திட்டங்களும் சென்றடைய வேண்டும் என்றும் நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் சாலை மேம்பாடு பணிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் நலத்திட்ட உதவிகள் சென்று சேர வேண்டும். ஊரக வளர்ச்சித்துறை திட்டங்கள் சில பயனாளிகளுக்கு முறையாக சேர்வதில்லை என புகார்கள் வருகின்றன. திட்டங்கள் தாமதமின்றி செயல்படுத்தப்படுவதுடன், பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் கிடைப்பதை அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளார்.

அதேபோல, சமூக நீதித்துறை சார்பில் மாணவர்களுக்குவழங்கப்படும் கல்வி உதவித்தொகையை உயர்த்துவதா அல்லது தற்போதைய அளவிலேயேதொடர்வதாஎன்பது குறித்தும் ஆலோசனை நடைபெற்றதாகவும், ஆணவக் கொலைகளை தடுக்கும் வகையில் தனிச்சட்டம் கொண்டு வர வேண்டும் என்ற நீண்டகால கோரிக்கை தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. ஆதி திராவிடர் மக்களுக்கான பட்டா வழங்கல், விடுதிகள் பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. சமூக நீதித்துறையின் செயல்பாடுகள் மக்களிடையே மேலும் வரவேற்பைப் பெறும் வகையில், வரவிருக்கும் நிதிநிலை அறிக்கையில் புதிய திட்டங்களை அறிவிப்பது குறித்தும், தற்போதைய நிதிப் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு எந்த திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்பது குறித்தும் அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.

# அ.தி.மு.க. புத்துணர்வுடன் புதிய எழுச்சி பெறும்; நிர்வாகிகள் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேச்சு



சென்னை: கட்சிக்கு விசுவாசம்இன்றிதுரோகம் இழைத்தவர்கள் பற்றி மீண்டும் என்னிடம் பேசாதீர்கள் என மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகமான எம்ஜிஆர் மாளிகையில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றவருகிறது.மாவட்டவாரியாக கட்சி நிர்வாகிகளை எடப்பாடி பழனிசாமி சந்தித்து, தேர்தல்தோல்வி குறித்து ஆலோசித்து வருகிறார்.

அந்த வகையில்,5-வது நாளான இன்று திருச்சி மாவட்ட நிர்வாகிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைகூட்டத்தில் திருச்சி புறநகர், திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி கிழக்கு ஆகிய மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் பேசிய எடப்பாடி பழனிசாமி, "கட்சிக்கு விசுவாசமாக இல்லாமல் துரோகம் இழைத்தவர்களின் பழைய கதையை பற்றி மீண்டும் என்னிடம் பேசவேண்டிய அவசியம் இல்லை. அதிமுக தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து வரக் கூடிய உள்ளாட்சி தேர்தலில் அதிமுகவிற்கு வெற்றியை தேடி தர வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

மேலும், அதிமுக புத்துணர்வுடன் புதிய எழுச்சி பெற்று மீண்டும் ஆட்சி கட்டிலில் அமரும். நிர்வாகிகள் யாரும் மனசோர்வு அடையாமல் கட்சிப் பணியில் கவனம் செலுத்துங்கள் என அறிவுறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக இக்கூட்டத்தில், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தோல்விக்கான காரணமும், வரும் நாட்களில் மேற்கொள்ளவுள்ள கட்சி வளர்ச்சி பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக வரும் உள்ளாட்சி தேர்தலில் அதிமுக வெற்றி பெறுவதற்கு ஏற்ப செயல்பாடுகளை தீவிரப்படுத்த நிர்வாகிகளுக்கு பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை வழங்கினார்.

தேர்தல் தோல்விக்கு பிறகு அதிமுகவின் முக்கிய நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், வெற்றி பெற்ற எம்.எல்.ஏக்கள் உட்பட பலர் கட்சியை விட்டு வெளியேறியதால், அதிமுகவின் செயற்குழு மற்றும் பொதுக் குழுவை மாற்றி அமைப்பதற்கு எடப்பாடி பழனிசாமி ஆலோசித்து வருவதாக பேசப்படுகிறது.

அதன் ஒரு பகுதியாக மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில், மாவட்டம் வாரியாக உள்ள செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களை புதிதாகசேர்ப்பதுகுறித்து முடிவெடுத்து,

அதற்கான பட்டியலை மாவட்ட நிர்வாகிகள் தயாரித்து சமர்பிக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959


# தொடர்ந்து குறைந்து வரும் தங்கம் விலை வெள்ளி விலையும் சரிவு





சென்னை: ஆபரணத் தங்கத்தின் விலை (ஜூலை 8) தொடர்ந்து 3-வது நாளாகக் குறைந்துள்ளது. சென்னையில் இன்று 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.560 குறைந்துள்ளது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.5 குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

கடந்த மே மாதம் தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. அதையடுத்துதங்கம்விலையில் தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தங்கத்தின் விலை ஜூலை பிறந்ததில் இருந்து சில நாட்கள் உயர்ந்த நிலையில் ஜூலை 4, 5 தேதிகளில் மாற்றமின்றி விற்பனையானது.

இந்நிலையில் ஜூலை 6,7 என வாரத்தின் முதல் இரண்டு தினங்களில் மட்டும் தங்கம் விலை பவுனுக்கு ரூ.2400 குறைந்தது.

தொடர்ந்து இன்று மூன்றாவது நாளாக தங்கம் விலை குறைந்துள்ளது.

அதன்படி, சென்னையில் இன்று 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.70 குறைந்து ஒரு கிராம் ரூ.13,330-க்கும், பவுனுக்கு ரூ.560 குறைந்து ஒரு பவுன் ரூ.1,06,640-க்கும் விற்பனையாகிறது. இது நகை வாங்குவோர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

18காரட்தங்கம்கிராமுக்கு ரூ.50 குறைந்து ஒரு கிராம் ரூ.11,150-க்கும், 24 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.76 குறைந்து ஒரு கிராம் ரூ.14,542-க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை, இன்று கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் ரூ.5 குறைந்து ஒரு கிராம் ரூ.245-க்கும்,கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,45,000-க்கும் விற்பனையாகிறது.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### சிறு குறு மற்றும் நடுத்தரத்தொழில் முனைவோர்களின் மூலமாக உற்பத்தியாகும்

## மூலபொருட்களை நாடு முழுவதும் ஏற்றுமதி செய்து விற்பனை செய்வது எப்படி, இதனால் கோவை மாநகரின் வளர்ச்சி எவ்வாறு அமையும் என்பது குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம்



மத்திய மற்றும் மாநில கூட்டமைப்பின் கீழ் கோவை மாநகரில், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்மைய உற்பத்தியாளர்களின், மூலபொருட்களை நாடு முழுவதும் ஏற்றுமதி செய்து, அவர்களையும்,தொழில் முனைவோர்களாக மாற்றஎன்னென்னவழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி கோவை டவுன்ஹால் பகுதியில்உள்ளமாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் நடைபெற்றது, கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் வழிகாட்டுதலின் படி,தமிழக அரசின் குறு, சிறு, மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை, மாவட்ட தொழில் மையம் சார்பாக நடைபெற்ற இந்த கருத்தரங்கில் கோவை மாவட்டத்தை சுற்றியுள்ள பல்வேறு சிறு குறு, மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். கோவை மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் சண்முகசிவா,சிஐஏ அமைப்பின் தலைவர் தேவக்குமார், எப்.ஐ.இ.ஒ அமைப்பின் துணை இயக்குநர் சுவாமி நாதன், உள்ளிட்டோர் கலந்து கொண்டு கருத்தரங்கில்தொழில் துறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

அப்பொழுது.. சிறு குறு தொழில் முனைவோர்கள் தங்களது உற்பத்தி திறனை எவ்வாறு ஏற்றுமதிசெய்யலாம்,அதனை முறையாக பதிவு செய்வது எவ்வாறு? நாம் வழங்கும் உதிரிபாகங்களுக்கான பணத்தை பெறுவது எப்படி? இதற்கான உரிமங்கள், அரசின் சான்றிதழ்கள் பெறுவது எப்படி? என்பது குறித்த பல்வேறு கேள்விகளுக்கு தெளிவான விளக்கங்கள் அளிக்கபட்டது.சிறு,குறு, தொழில், உரிமையாளர்களும், ஏற்றுமதியாளர்கள் ஆனால் மட்டுமே கோவை மாநகரின் வளர்ச்சி பெருகும் என தெரிவிக்கபட்டது. இக்கருத்தரங்கின் மூலமாக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களை, வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்வது தொடர்பாக பல்வேறு சந்தேகங்களையும் தொழில் முனைவோர்கள் எழுப்பினர். அதற்கான விளக்கத்தையும் மாவட்ட தொழில் மையத்தினர் அளித்ததுடன், கோவையில், எம்எஸ்எம்இ நெக்ஸ் ஜென்ட்ரேஷன் சிறப்பாக வளர்ச்சி பெற சிஐஏ அமைப்பின் சார்பாக, பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோவை மாவட்டம் லக்ஷ்மி மில்ஸ் பகுதியில் அமைந்துள்ள

## லுலு ஹைப்பர் மார்க்கேட்டில் இந்த ஆண்டுக்கான எண்ட் ஆப் சீசன் திட்டத்தை அமுல்படுத்தும் விதமாக அதிரடி ப்ளாட் 50 சதவிகித தள்ளுபடி மெகா விற்பனை வரும் 9ம் தேதி முதல், 12ம் தேதி வரை நடைபெற உள்ளது




கோவைலக்ஷ்மிமில்ஸ் பகுதியில் லூலூ ஹைப்பர் மார்க்கேட் அமைந்துள்ளது.இங்குதினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தங்களது வீடுகளுக்கு தேவையான, அத்தியாவசிய பொருட்கள் முதல், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், வண்ண வண்ண ஆடைகள், உணவு வகைகளை வாங்கி செல்கின்றனர். இந்த நிலையில் இங்கு வரும் ஜூலை 9ம் தேதி முதல் 12ம் தேதி வரை, எண்ட் ஆப் சீசன் எனும் 50 சதவிகித தள்ளுபடியை அறிவித்துள்ளது. கடந்த முறை இத்தகைய ஆபர் அறிவித்ததை தொடர்ந்து பொதுமக்கள் கூட்டம் அளவுக்கு அதிகமாக வந்ததை கருத்தில் கொண்டு இந்த முறை, காலை 9 மணி முதல், நள்ளிரவு 1 மணி வரை, பொதுமக்கள் வந்து செல்ல ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளது. இது குறித்த விளம்பர பலகைவெளியீட்டுவிழா நிகழ்ச்சி லூலூ ஹைப்பர் மார்க்கேட் வளாகத்தில் நடைபெற்றது. அப்பொழுது இந்த விளம்பரத்தை வெளியிட்ட லூலூ மண்டல மேலாளர் மகேசன், பொது மேளாளர் பாலாஜி, கொள்முதல் மேலாளர் சுனில் மேனன் சூப்பர் மார்க்கெட் மேளாளர் சின்னதுரை ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.. அதிக சேமிப்பு அதிக மகிழ்ச்சி என்ற நோக்கத்தில் இந்த எண்ட் ஆப் சீசன் துவங்கப்பட்டு ள்ளது. இந்த நாண்கு நாட்கள் நடைபெறும் எண்ட் ஆப் சீசனில், மளிகை பொருட்கள், உணவு பொருட்கள், வீட்டுஉபயோகபொருட்கள், சமையலறை உபகரணங்கள், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், மற்றுல் மொபைல் போன்கள், உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் 50 சதவிகித தள்ளுபடியில் பொதுமக்கள் வாங்கி செல்லலாம், இது மக்களின் பணத்தை சேமிக்கும் ஒரு வாய்ப்பு என்று தெரிவித்தனர். ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு ஆடைகளும் இந்த சிறப்பு சலுகையில் கிடைக்கும் இந்த ஷாப்பிங் என்பது பொதுமக்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை வழங்கும் என்றார். மேலும் இந்த திட்டமானது குறிப்பிடப்பட்ட பொருட்களுக்கு மட்டுமே எனவும், நிபந்தனைகளுக்கு உட்பட்டது என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்த க்கது.

### கோவை மாவட்ட ஸ்டுடியோ ஓனர்ஸ் அசோசியேஷன் அமைப்பின் சார்பாக

## தமிழக ஸ்டுடியோ தொழிலை பாதுக்காக்கும் வகையில் திருத்தி அமைக்கப்பட்ட புதிய கட்டண விளம்பர பலகையயை வெளியிட்ட ஸ்டுடியோ ஓனர்ஸ் அசோசியேஷன் சங்கத்தினர்



கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில், கோவை மாவட்ட ஸ்டுடியோ ஓனர்ஸ் அசோசியேஷன்,மற்றும் கோவை மாவட்ட போட்டோ வீடியோ கலைஞர்கள் தொழிற்சங்க ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு இச்சங்கத்தின் தலைவர் ஆண்டனி ராஜ், செயளாலர் செல்வகுமார், பொருளாளர் வெங்கடேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், புகைப்படக் கருவிகள், அதற்கான மூலப்பொருள்கள்,மென்பொருள்கள்,செயற்கை நுண்ணறிவுசேவைகள்,இணைய வசதி, மற்றும் பிற செயல்பாடு கட்டணங்கள், தொடர்ந்து அதிகரித்து வருகின்றது, இந்த நிலையில் தரமான சேவையை நிலைநிறுத்தவும், உள்ளூர் ஸ்டுடியோக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ற நியாயமான, கட்டண மறு ஆய்வு குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் கடமையை இச்சங்கம் முன்னெடுத்து ள்ளது. தமிழக ஸ்டுடியோ தொழிலை பாதுக்காக்கும் வகையில், புகைப்படத்துறையில்,

தற்போதைய நிலை மற்றும் நியாயமான கட்டண மறு ஆய்வு தொடர்பான விளம்பர அபலகையினை இக்கூட்டத்தின் வாயிலாக வெளியீட பட்டது. இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய இச்சங்கத்தின் தலைவர் ஆன்டனி ராஜ் கூறியதாவது..

கடந்த சில ஆண்டுகளில், புகைப்படத் தொழிலுக்கு, தேவையான அனைத்து மூலப்பொருட்களின் விலை, மற்றும் கருவிகளின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. உதாரணமாக கேமரா,லென்ஸ்,கணினி, ஹார்ட் டிஸ்க், மெமரி கார்டு, ஆல்பம், பிரிண்டிங், பிரேம், மின்சாரம், இன்டர்நெட் மற்றும் தொழில்முறை மென்பொருள்களின் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது, எனவே ஸ்டுடியோ தொழிலை பாதுகாக்கும் வகையில், ஒரு சில கட்டண உயர்வுகள் செய்யப்பட்டுள்ளது. அதற்கு பொதுமக்கள் உரிய ஆதரவை தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் என்பது குறிப்பி டத்தக்கது.



### கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள

## ஸ்ரீ இராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தூய்மை இந்தியா நோக்கில், சுவச்சதா பக்வாடா என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி

### மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் சுரேஷ் கோபி பங்கேற்பு


மத்தியபெட்ரோலியம், மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிமிடெட் மற்றும் கோவை ஸ்ரீ இராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து, நடத்தும் தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக,சுவச்சதா பக்வாடா என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கோவை ஆவாரம்பாளையம்பகுதியில்உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லுரி விழா அரங்கில் நடைபெற்றஇந்தநிகழ்ச்சியில், கல்லூரியின் முதல்வரும் செயலருமான முனைவர் பி.எல். சிவக்குமார் வரவேற்புரையாற்றினார். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்லிமிடெட் குழாய் பிரிவின் நிர்வாக இயக்குநர் பிஜூ கோபிநாத் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, மற்றும் சுற்றுலாத்துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபி கலந்து கொண்டு இத்திட்டத்தின் நோக்கம், மற்றும் நன்மைகள் குறித்து மாணவ மாணவியர்கள் மத்தியில் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் குழாய் பிரிவின் நிர்வாக இயக்குநர் பிஜூ கோபிநாத், சுவச்சதா பக்வாடா தகவல் பெயர் பலகையை திறந்து வைத்தார்.

தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை வலியுறுத்தும்,

சுவச்சதா பக்வாடா உறுதி மொழி மாணவ மாணவியர்கள் மத்தியில் ஏற்க்கப்பட்டது. தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியின் நிறைவாக எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் தலைமை நிர்வாக அலுவலர் டி. மகேஷ்குமார் நன்றியுரை கூறி விழாவை நிறைவு செய்தார். இந்த நிகழ்ச்சியில் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளரும் எஸ். என். ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் மக்கள் தொடர்பு மேலாளருமான முனைவர் பிரகதீஸ்வரன், துறைசார் அரசு அதிகாரிகள், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள், பேராசிரியர்கள்,மாணவமாணவியர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அ.தி.மு.க.வை விட்டு விலக மாட்டேன்: வதந்திகளுக்கு ஆற்காடு எம்.எல்.ஏ. எஸ்.எம்.சுகுமார் விளக்கம்



அதிமுக தலைமையகக் கூட்டத்தில் பங்கேற்காதது குறித்து பரவி வரும் வதந்திகளுக்கு ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ். எம்.சுகுமார் செய்தியாளர்கள் சந்திப்பில் விளக்கம் அளித்துள்ளார்.

அதிமுக தலைமையகம் சார்பில் தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டப் பொறுப்பாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சென்னை தலைமையகத்தில் நடைபெற்ற ராணிப்பேட்டை மேற்கு மாவட்ட அதிமுக பொறுப்பாளர்கள் கூட்டத்திற்கு, மாவட்டச் செயலாளர் ஏழுமலைஅழைப்புவிடுத்திருந்தார்.

இக்கூட்டத்தில்ஆற்காடுசட்டமன்றஉறுப்பினர் எஸ்.எம்.சுகுமார் கலந்து கொள்ளாததால், அவர் கூட்டத்தைப் புறக்கணித்துவிட்டதாக வதந்திகள் பரவின. இவற்றுக்கு மறுப்பு தெரிவித்து ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த எஸ்.எம்.சுகுமார் விடுத்துள்ள விளக்க அறிக்கை: ராணிப்பேட்டைமாவட்டஆட்சியர் தலைமையில் அனைத்துத் துறை அதிகாரிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற முக்கியக் கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. ஆற்காடு தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை அதிகாரிகளிடம் நேரில் முன்வைத்து, தொகுதி வளர்ச்சிக்கானபணிகளை விரைவுபடுத்தவேண்டிய கட்டாயச் சூழல் எனக்கு இருந்தது

. தேர்தலில் ஆற்காடு தொகுதி மக்கள் என் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றவே இக்கூட்டத்தில் பங்கேற்றேன். இதில் எவ்வித உள்நோக்கமும் இல்லை. தொகுதி வளர்ச்சி மட்டுமே எனது நோக்கம்."

மேலும், கட்சி மாறுவது குறித்த வதந்திகளுக்குப் பதிலளித்த அவர், "நான் எந்தச் சூழ்நிலையிலும் மாற்றுக் கட்சிக்குச் செல்ல மாட்டேன்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் வழிகாட்டுதலிலும், ஆற்காடு தொகுதி அதிமுக பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்களின் உழைப்பாலும் நான் வெற்றி பெற்றுள்ளேன். எனவே, அதிமுகவை விட்டு விலகும் எண்ணம் எப்போதும் இல்லை. முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி வெளிநாட்டில் நடைபெறும் தமிழ் வளர்ச்சிக் கழகக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றுள்ளார். ஆட்சி யர் கூட்டத்தில் பங்கேற்றது தொகுதி நலனுக்காகவே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை"என்றுதெளிவுபடுத்தினார்.



நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு இளங்கலை மற்றும் இளம் அறிவியல் மாணவர்களுக்கு ஆறாம் நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் 08072026 புதன் கிழமை நடைபெற்றது. மாணவர் பேரவை பொறுப்பாளர், கணிதத் துறைத்தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் முனைவர் ரா.வீரபத்திரன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். வரலாற்றுத் துறைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் முனைவர் செ.பனிதாசன் தலைமையுரையாற்றினார். சிறப்பு விருந்தினர் முனைவர் சேவியர் தாஸ் மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கினார். தமிழ் இணைப் பேராசிரியர் முனைவர் த.அஜி மற்றும் ஆங்கில உதவிப் பேராசிரியர் முனைவர் நா.ஞா. மெர்ளி ஆகியோர் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு விரிவாக்க செயல்பாடுகள், சேவை பிரிவுகள் மற்றும் மன்றங்கள் குறித்து விளக்கவுரையாற்றினார்கள்.

கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில் அழியாத விழிகள் எனும் தலைப்பில்

# மெட்டோ சிட்டி டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் சார்பாக, மறைந்த நடிகர் பாக்யராஜ் வழியில் விழிகள் தானம் வழங்குவதை வலியுறுத்தி சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில் அழியாதவிழிகள்எனும் தலைப்பில், மெட்டோ சிட்டி டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் சார்பாக, மறைந்த நடிகர் பாக்யராஜ் வழியில்,

விழிகள்தானம்வழங்குவதை வலியுறுத்தி சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக முதற்கட்டமாக சுமார் 150க்கும் மேற்பட்ட மெட்ரோசிட்டிடெவலப்பர்ஸ் நிறுவன ஊழியர்கள், பொதுமக்கள், மற்றும் பாக்யராஜ் ரசிகர் நற்பணி மன்ற நிர்வாகிகள் இணைந்து தங்களது கண்களை தானம் வழங்குவதாக ஒப்புதல் அளித்தனர். அவர்களுக்கு இதற்கான சான்றிதழ்கள் வழங்கபட்டது.தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய மெட்ரோ சிட்டி டெவலப்பர்ஸ் நிறுவனத்தின்நிறுவனர்முரளி தரன்,செய்தியாளர்களிடம் கூறியதாவது..

மறைந்த, திரைப்பட நடிகரும், இயக்குனருமானபாக்யராஜ்அவர்களின், நினைவை போற்றும் வகையில்,இன்று முதற்கட்டமாக சுமார், 150க்கும் மேற்பட்டோர் தங்களது கண்கள் தானமாக வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கோவை

அரவிந்த் கண் மருத்துவமனையை சார்ந்த மருத்துவர்கள் கண்களை தானமாக பெறுவதற்கான விண்ண ப்பங்களை வழங்கி அதில் முறையாக பதிவு செய்து அந்த விண்ணப்பங்களை மருத்துவர்கள் பெற்றுள்ளனர். இந்த திட்டம் இன்னமும் விரிவு படுத்தி, அடுத்த அடுத்த நிகழ்ச்சிகளை நடத்தி, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, இன்னும் அதிகமான கண்களை தானமாக பெற்று, கண் பார்வையற்றவர்களின் வாழ்வில் ஒளியேற்ற மெட்ரோசிட்டிடெவலப்பர்ஸ் துணை நிற்க்கும் என்றார். மேலும் நமது அமைப்பு சார்பாக, தினமும் 100 நபர்களுக்கு அன்னதானம், ஏழை எளிய குழந்தைகளின் படிப்புக்கு கல்வி உதவித்தொகை வழங்குவது, என

கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ச்சியாக செய்து வருகின்றோம்.

மேலும் ஏழை எளிய மக்கள் மற்றும் வீடற்றோர்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் குறைந்த விலையில் வீட்டு மனை திட்டங்களை அறிமுகம் செய்து வீட்டு மனைகளை வழங்கி வருகின்றோம்.தொடர்ந்து இரத்த தானம் வழங்கி வருகிறோம். இன்று முதல் கண்தானம் பற்றிய விழிப்புணர்வையும்ஏற்படுத்த உள்ளதாக தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில்

குட்டி ஸ்டோரி ஸ்பிக்சர்ஸ் பட தயாரிப்பாளர்

புவனேஸ் சின்னசாமி, ஸ்ரீ மான் சுந்தரம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



★தென்காசி மாவட்டம்,குற்றாலம் அருள்மிகு திருக்குற்றாலநாதசுவாமி திருக்கோவில் வளாகத்தினை மாவட்ட ஆட்சியர் .ரஞ்ஜீத் சிங்,., பார்வையிட்டார் பின்னர் குற்றாலம் பகுதிகளில் நடைபாதைகளில் கடைகளை அகலப்படுத்தி வைத்திருந்தது அப்புறப்படுத்த வேண்டும் என அதிகாரியிடத்தில் உத்தரவிட்டார்

# காமராஜர் குறித்து இழிவாக பேசிய யூடூப்பர் முத்தர அகமது மீது உடனடியாக வழக்கு பதிவு செய்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வழக்கறிஞர் ஜெயச்சந்திரன் கோரிக்கை



தூத்துக்குடி காமராஜர் குறித்து இழிவாக பேசிய யூடூப்பர் முத்தர அகமது மீது உடனடியாக முத்தையாபுரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று தூத்துக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்ற மேஜிஸ்டிரேட் இலக்கியா உத்தரவு காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வழக்கறிஞர் ஜெயச்சந்திரன் கோரிக்கைவிடுத்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்: கடந்த 30.11.2025 அன்று யூடியூப் முக்தர் அகமது தனது யூடியூப் சேனலில் தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் பெருந்தலைவர் என்று அழைக்கப்படும் காமராஜர் குறித்து அவதூறு பரப்பும் கருத்துக்களை வெளியிட்டார் அப்போது இந்த சம்பவம் பெரும் பரபரப்பாகி முக்தார் அகமதுவைகைதுசெய்ய வேண்டும் என பல்வேறு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர் ஆனால் அப்போதைய திமுக அரசு அவரை கைது செய்யாமல் காலம் தாழ்த்தி வந்தது இதைத்தொடர்ந்து பல்வேறு அமைப்பினர் நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் தூத்துக்குடியை சேர்ந்த வழக்கறிஞர் ஜெயச்சந்திரன் முக்தார் அகமது மீது காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என முத்தையாபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்ஆனால்காவல்துறையினர் இது தொடர்பாக உரிய வழக்கு பதிவு செய்யாமல் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை வழக்கறிஞர் ஜெயச்சந்திரன் தூத்துக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண் இரண்டில் முக்தார் அகமது மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க நீதிமன்ற உத்தரவிட வேண்டும் என மனு தாக்கல் செய்திருந்தார் இந்த மனுவை விசாரித்த தூத்துக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்ற மேஜிஸ்டிரேட் இலக்கியா முத்தையாபுரம் காவல்துறை பெருந்தலைவர் காமராஜரை இழிவாகபேசிய முக்தார் அகமது மீது உரிய நடவடிக்கை எடுத்து அவரை விசாரணை செய்து வழக்கு பதிவுசெய்து நடவடிக்கைஎடுக்கவேண்டுமென உத்தரவு பிறப்பித்துள்ளார் மேலும் நான்கு வாரங்களுக்குள் காவல்துறை இது தொடர்பாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவும் பிறப்பித்து உள்ளார் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை மற்றும் முத்தையாபுரம் காவல்துறை பெருந்தலைவர் காமராஜர் குறித்து அவதூறு பரப்பும் வகையில் பேசிய யூடியுப்ர் முக்தார் அகமது மீது உடனடியாக வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2026, 2027 ம் கல்வியாண்டில்

# இளங்கலை மற்றும் இளம் அறிவியல் முதலாம் ஆண்டு சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு வார கால திறன் மேம்பாட்டு பயிற்சி



நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2026-2027 ம் கல்வியாண்டில் இளங்கலை மற்றும் இளம் அறிவியல் முதலாம் ஆண்டு சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு வார கால திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் 01-07-2026 முதல் 08-07-2026 வரை ஆறு நாட்கள் நடைபெற்றது.

01-07-2026 புதன் கிழமைமுதலாம்ஆண்டு வகுப்புகள் தொடங்கியது. அன்று காலை கல்லூரிக்கு வருகை புரிந்த முதலாம் ஆண்டு மாணவமாணவிகளுக்கு கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவ, மாணவிகள் பூங்கொத்து மற்றும் இனிப்பு வழங்கி வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து கல்லூரி கலையரங்கத்தில் தொடக்க விழா நடைபெற்றது.கல்லூரி மாணவர் பேரவையின் பொறுப்பாளரும் கணித்துறைத்தலைவர் மற்றும் இணைப் பேராசிரியருமான முனைவர் ரா. வீரபத்திரன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ) முனைவர் மு.சுசீலாபாய் தலைமையுரையாற்றினார்.வரலாற்றுத்துறைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் முனைவர் செ. பனிதாசன் வாழ்த்துரை வழங்கினார். சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரியின் முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் பரமார்த்தலிங்கம் சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மாணவ, மாணவிகள் தங்களை அறிமுகம் செய்து அவர்கள் வருங்காலத்தில் தாங்கள் என்னவாக ஆகவேண்டும் என்ற தங்களின் எண்ணங்களை தெரிவித்தனர்.ஆசிரியர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

கணித இணைப்பேராசிரியர் முனைவர் பா. அருள்பால்சுதாகர்நன்றியுரையாற்றினார். இரண்டாம் நாள் பயிற்சி வகுப்பில் மாணவர்களுக்கு நிர்வாக கட்டமைப்பு,துறைகள்,பாடத்திட்டங்கள், நான் முதல்வன்திட்டம்,தேர்வு மற்றும்மதிப்பீட்டு முறை குறித்து பேராசிரியர்கள் விளக்கினார்கள். மூன்றாம் நாள் பயிற்சி வகுப்பில் மனித உரிமைகள், பெண்கள் பாதுகாப்பு, மாணவர் நலன்,சுகாதாரம் மற்றும் தூய்மை, மாணவர் ஆதரவு அமைப்புகள், கல்லூரியில் செயல்படும் குழுக்களும் விதிகளும் பற்றி பேராசிரியர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள். திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியின் பொருளாதாரத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கிருஷ்ணகுமார் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் உரையாற்றினார். மாணவர்களுக்குதுறைசார் காணொளி காண்பிக்கப்பட்டது.

நான்காம் நாள் பயிற்சி வகுப்பில் மாணவர்களுக்கு பயனளிக்கும் அரசு திட்டங்கள் பற்றி தெரிவிக்கப்பட்டது. ஆசாரிப்பள்ளம் காவல் ஆய்வாளர் முத்தையா அவர்கள் மாணவர் பாதுகாப்பு,விழிப்புணர்வு மற்றும் சமூக பொறுப்புகள் குறித்து எடுத்துரைத்தார். ராக்கிங் எதிர்ப்பு,பாலியல்துன்புறுத்தல் எதிர்ப்பு, ஐசிசி மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு குறித்து சம்பந்தப்பட்ட பொறுப்பாசிரியர்கள் எடுத்துரைத்தார்கள்.

ஐந்தாம் நாள் பயிற்சி வகுப்பில் தொழில் வழிகாட்டல்மற்றும்வேலைவாய்ப்பு குறித்து மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட பொறுப்பாசிரியர்கள் விளக்கினார்கள். முன்னாள் மாணவர்கள் ரொனால்டு ரிஷி,வர்ஷா, தங்கரெதி, புவனா, சோபியா, அனுபிரியா, நந்தனா ஆகியோர் ஊக்கமளிக்கும் உரையாற்றி தங்கள் சாதனைகளை முன்னாள் மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து முன்னாள் மாணவர்கள் முதலாம் ஆண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

ஆறாம் நாள் பயிற்சி வகுப்பில் விரிவாக்க செயல்பாடுகள், சேவை பிரிவுகள் மற்றும் மன்றங்கள் குறித்து பேராசிரியர்கள் எடுத்துரைத்தார்கள். தூத்தூர் கல்லூரி சுயநிதிப்பிரிவு முன்னாள் இயக்குநர் டாக்டர் சேவியர் தாஸ் அவர்கள் மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை வழங்கினார்கள். தொடர்ந்து சிறந்த நடைமுறைகள் குறித்த காணொளி காண்பிக்கப்பட்டது. நிறைவு நிகழ்வாக ஆறு நாட்கள் பயிற்சி வகுப்புகள் பற்றி முதலாம் ஆண்டு மாணவர்களிடம் கருத்து கேட்கப்பட்டு இனிதேநிறைவுபெற்றது.

# கலவை அருகே அரசு மதுபான கடை உடைத்து பீர் பாட்டில், பணம் திருட்டு; போலீசார் விசாரணை



ராணிப்பேட்டை மாவட்டம், கலவை அருகே உள்ள மேல்புதுப்பாக்கம் பகுதியில் அரசு மதுபான கடை செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் வழக்கம் போல் நேற்று இரவு மதுபான கடை ஊழியர்கள் விற்பனை செய்த மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பணத்தை அதே அறையில் உள்ள லாக்கரில் வைத்துபூட்டி சென்றுள்ளனர்.

இந்நிலையில் இன்று காலை மதுபான கடை அருகே உள்ள விளை நிலத்தை பார்க்க வந்த விவசாயி மதுபான கடை பின்புறம் துளையிடப்பட்டதை பார்த்து உடனடியாக வாழைப்பந்தல் காவல்துறையினருக்கும் மதுபானக்கடை ஊழியருக்கும் தகவல் தெரிவித்தார்.

அதன் பேரில் விரைந்து வந்த போலீசார் அங்கிருந்த சிசிடிவி காட்சிகளை வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் மதுபானக் கடையை துளையிட்ட மர்மநபர் கடையில் இருந்த ஐந்து பீர் பாட்டில் மற்றும் சில்லறை பணத்தை மட்டுமே திருடியதுடன் கடையின் அருகிலேயே அமர்ந்து 4 பீர் மட்டுமே குடித்து விட்டு ஒரு பாட்டிலை விட்டு சென்றுள்ளது தெரியவந்துள்ளது.

மேலும் கைரேகை நிபுணர்கள் வர வைக்கப்பட்டு கைரேகை உட்பட தடயங்களை சேகரித்து வருகின்றனர்

# மாணவர்களுக்கு 5 வகை மரக்கன்றுகள் வழங்கி பசுமை விழிப்புணர்வு ஏற்படுத்திய தேவகோட்டை நகராட்சி



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில், நகர்ப்புறங்களில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் நோக்கில் தேவகோட்டை நகராட்சி சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு தேவகோட்டை நகர்மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். பள்ளி தலைமையாசிரியர் சொக்கலிங்கம் , நகராட்சி ஆணையாளர் ராஜமாணிக்கம், நகர்மன்ற துணைத்தலைவர் ரமேஷ்,சமூக ஆர்வலர் பொன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் நகர்மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் பேசியதாவது:

மரங்கள் மனித வாழ்க்கையின் ஆதாரமாக திகழ்கின்றன. நாம் வெளியேற்றும் கார்பன் டைஆக்சைடை உள்வாங்கி, உயிர்வாழ அத்தியாவசியமான ஆக்சிஜனை வழங்குகின்றன. மரங்கள் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதோடு, தூய்மையான காற்று, உணவு, நிழல், மழைவளம் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையையும் உறுதி செய்கின்றன.

வீடுகள் மற்றும் சாலையோரங்களில் நடப்பட்ட மரக்கன்றுகள் வறண்டு காணப்பட்டால், குடிநீரை பயன்படுத்துவது போலவே சிறிதளவு தண்ணீரையாவது ஊற்றி அவற்றை பாதுகாக்க வேண்டும். ஒவ்வொருவரும் மரங்களை வளர்த்து பராமரித்தால் தேவகோட்டையை பசுமை நிறைந்த நகரமாகமாற்றமுடியும்.இப்பள்ளி மாணவர்கள் மரங்களை வளர்ப்பதில் தொடர்ந்து ஆர்வம் காட்டுவது பாராட்டுக்குரியது. இன்று வழங்கப்படும் மரக்கன்றுகளை நன்கு பராமரித்து வளர்த்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முன்னுதாரணமாக திகழ வேண்டும்," என்றார்.

இதனைத் தொடர்ந்து, பள்ளிவளாகத்தில்நகர்மன்றத் தலைவர் சுந்தரலிங்கம் மற்றும் துணைத்தலைவர் ரமேஷ் ஆகியோர் மரக்கன்றுகளை நட்டனர்.

பின்னர், சீதாப்பழம், கொய்யா, பலா உள்ளிட்ட பல்வேறு வகைகளைச் சேர்ந்த மொத்தம் 5 மரக்கன்றுகள் அடங்கிய தொகுப்புகள் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டன. மரக்கன்றுகளை உற்சாகத்துடன் பெற்றுக் கொண்ட மாணவர்கள், அவற்றை முறையாக வளர்ப்பதாக உறுதியளித்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை தேவகோட்டை நகராட்சி சுகாதார அலுவலர் பாண்டி செல்வம், சுகாதார ஆய்வாளர் பிருந்தா, உதவியாளர் ஜெகன் மற்றும் நகராட்சி சுகாதாரப் பணியாளர்கள் சிறப்பாகசெய்திருந்தனர்.

ஆசிரியை சிவரஞ்சனி வரவேற்புரையையும், ஆசிரியர் ஸ்ரீதர் நன்றியுரையையும் வழங்கினர்.

இந்நிகழ்வில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், நகராட்சி அலுவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மரங்கள் வளர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தினர்.



★தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், வடக்கு பாப்பான்குளம் கிராமத்தில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.★ மேலும் பொது மக்களிடம் மனுக்களை பெற்று அதிகாரிகள் யிடத்தில் மனுக்கள் மீது உடனடியாக உடனடியாக நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு பதில் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டார்



திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலராக புதியதாக பதவியேற்று உள்ள மதிப்புமிகு ஆர்.அறிவழகன் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் மரியாதை நிமித்தமாக சந்தித்து பொன்னாடை அணிவித்து புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவித்து தற்போது நடைபெற்று வரும் பொது மாறுதல் கலந்தாய்வு எந்த இடையூறு இல்லாமலும் இணைய சேவை பாதிக்காத வகையில் நடைபெற வேண்டும் என்றும் மேலும் மாணவர்கள் கல்வியில் மேம்பாடு அடைய பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது ஆசிரியர்கள் கோரிக்கைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்ய கேட்டுக்கொண்டார் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களும் அனைத்து கோரிக்கைகளையும் பொறுமையுடன் கேட்டு அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து உடனுக்குடன் நிவர்த்தி செய்வதாக தெரிவித்தார் மற்றும் நிகழ்வில் மாநிலத் துணை தலைவர் ஸ்டாலின் , கூட்டமைப்பின் ஆலோசகர்கள் முனுசாமி மற்றும் விவேக் உடனிருந்தனர்

# ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம்

## குழுத்தலைவர் / ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம், குழு தலைவர் / ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் நேற்று (08.07.2026) நடைபெற்றது.

மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் நோக்கம் மத்திய அரசுகளின் திட்டங்களை செயல்படுத்தும்போது அவை மக்கள் பிரதிநிதிகளால் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டு முறையான நிதிகள் சென்று சேர்வதையும், அதன் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இக்கூட்டம் நடத்தப்படுகிறது.

மேலும், இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 1,83,819 பதிவு செய்த குடும்பங்களில் 43,942 குடும்பங்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிமெண்ட் கான்கீரிட் தளம், புதிய குளம் அமைத்தல், குளம் தூர்வர்தல் பள்ளி சுற்றுச்சுவர் அமைத்தல், மரக்கன்றுகள் நடுதல், முடிவுற்ற சாலைப்பணிகள்,மகளிர் சுய உதவிக்குழு அமைத்தல் வங்கி நிதி இணைப்பு, திறன் வளர்ப்புபயிற்சி,தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட விபரம், பிரதம மந்திரி ஆதர்ஸ்கிராம்யோஜனா திட்டத்தின் கீழ் நடைபெற்ற பணிகளின் விபரம், பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முடிவுற்ற சாலை பணிகளின் விபரம், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் ஊரகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் இணைப்புகள் விபரம், வழங்கப்பட வேண்டிய குடிநீர் இணைப்புகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் விபரம், நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சார்பில் ஈரோடு மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டம், தூய்மை பாரத இயக்கம், அம்ருத் 2.0 திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் நிலைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



சுகாதாரத்துறையின் சார்பில் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம், பெண்கள் ஆண்கள் குடும்ப நல அறுவை சிகிச்சை இழப்பீட்டு தொகை, கதர் கிராம தொழில்கள் வாரியம், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, கனிமவளத் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை,சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் மற்றும் பவானி நகராட்சிகள் கால்நடை பாராமரிப்புத்துறை, உள்ளிட்ட துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் கடந்த 23.02.2026-ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக துறை வாரியாக அலுவலர்களிடம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , இணைத்தலைவர் / திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், பவானி சட்டமன்ற உறுப்பினர் கே.சி.கருப்பணன், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) செந்தில்குமரன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் துறைசார்ந்த உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

## கலெக்டர் ச.கந்தசாமி தகவல்

ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்புமுகாம்25.07.2026 அன்று கோபிசெட்டிபாளையத்தில் அமைந்துள்ள பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையேற்று பணிநியமன ஆணைகளை வழங்க உள்ளார். இவ்வேலைவாய்ப்பு முகாமில் 200க்கும் மேற்பட்ட தனியார்துறை வேலை அளிப்பவர்கள் கலந்துகொண்டு 10,000க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்குதங்கள் நிறுவனங்களுக்கு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். 8-ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி, பட்டதாரிகள், ஐடிஐ,டிப்ளமோ,பொறியியல் பட்டம் படித்தவர்கள், கணினி இயக்குபவர்கள், ஓட்டுநர்கள், செவிலியர், மருந்தாளுநர்பயிற்சிமுடித்தவர்கள் என அனைத்து கல்வித்தகுதியினரும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள அனுமதி இலவசமானதாகும். இம்முகாமில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு. மாவட்ட தொழில் மையத்தின் தொழில் முனைவோர்களுக்கான ஆலோசனைகள், மாவட்ட முன் னோடி வங்கியின் வாயிலாக வங்கிக்கடன் குறித்த வழிகாட்டுதல்கள் ஆகியன மேற்கொள்ளப்பட உள்ளது.


வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் நடத்தப்படும் இவ்வேலைவாய்ப்பு முகாம். வேலைநாடுநர்கள் மற்றும் வேலை அளிப்பவர்களுக்கு முற்றிலும் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. எனவே, ஈரோடு மாவட்டத்தில் தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமாக உள்ள அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இம்முகாமின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண்



இரத்து செய்யப்படமாட்டாது என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இம்முகாமில் கலந்துகொள்ள முன்பதிவு கட்டாயமானதாகும். -செய்ய முன்பதிவு https://forms.gle/GU-Vk2iNrUrkZE5EZ9 என்ற லிங்க் ஐக் கிளிக் செய்யவும் அல்லது கீழே உள்ள QR CODE ஐ ஸ்கேன் செய்யவும்.மேலும் விவரங்களுக்கு ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது தொலைபேசி எண் :0424-2275860 8675412356 மற்றும் employment_erode instagram page வாயிலாகவும் தொடர்பு கொள்ளலாம்.

# ஈரோடு மாவட்ட அரசு இசைப்பள்ளியில் மாணவ மாணவியர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட அரசு இசைப்பள்ளியில் மாணவ மாணவியர் சேர்க்கை (2026-2027) நடைபெற்று வருகிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளதாவது:

இசைப்பள்ளியில் சேருவதற்கு வயது வரம்பு 13 வயதுக்கு மேல் 25 வயதிற்குள் இருக்க வேண்டும். குரலிசை, பரதநாட்டியம், வயலின், மிருதங்கம் ஆகிய கலைகளுக்கு 7-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தவில், நாதசுரம் மற்றும் தேவாரம் ஆகிய கலைகளுக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால் போதுமானது. இசைப்பள்ளி படிப்பின் கால அளவு மூன்று ஆண்டுகள் ஆகும். இசைப்பள்ளியில் பயலுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000/-கல்வி உதவித் தொகை வழங்கப்படும். அனைத்து மாணவ மாணவியர்களுக்கு அரசு விடுதி வசதியும் செய்துதரப்படும்.இசைப் பள்ளிகளில் வழங்கப்படும் தேர்ச்சி சான்றிதழ் பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 வகுப்பு தேர்ச்சிக்கு இணைத்தன்மை வாய்ந்தது என தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மூன்று ஆண்டுகள் பயின்று அரசுத் தேர்வு இயக்ககம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்கள் கர்நாடக இசைக் கச்சேரிகள் நடத்தவும், நாதசுரம் மற்றும் தவில் வாசித்து தொழில் புரியவும், தேவாரம் பாடுதல் மற்றும் கோவில்களில் ஓதுவாராகப் பணிபுரியவும், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று திறமைகளை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் உள்ளன. திருகோவில்களில் தேவார ஓதுவார் பணியில் சேர்ந்திட இப்பள்ளியில் தேவார இசை பயின்று தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு முன்னுரிமை அளித்து வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.இப்பள்ளியில் படித்து தேர்ச்சி பெறுபவர்கள் சென்னை, மதுரை, திருவையாறு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள அரசு கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்பில் நேரடியாக மூன்றாம் ஆண்டில் சேரலாம்

ஆகவே கலை ஆர்வமுள்ள மாணவ மாணவிகள் அனைவரும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் ஈரோடு மாவட்ட அரசு இசை பள்ளியில் மாணவ மாணவியர் சேர்க்கை (2026-2027) 20.10.2026 விஜயதசமி அன்றுடன் முடிவடைகிறது. விபரங்களுக்கு தலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளி, பி.பெ. அக்ரஹாரம், பவானி-ரோடு, ஈரோடு-638 001 என்ற முகவரியிலும், கைப்பேசி எண்- 9486019582 (0424-2294365) தொடர்பு கொள்ளலாம் என ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# மும்பையில் கனமழையால் 1,100 மரங்கள் சாய்ந்தன

மும்பை: மும்பையில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது . கடந்த 7 நாட்களில் 1,100-க்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந் துள்ளன. இதனால் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

பல வாகனங்கள் சேதமடை ந்து ள்ளன. குறிப்பாக, ஜூலை 6-ம் தேதி ஒரே நாளில் 523 மரங்கள் விழுந் துள்ளன. கோரேகான் , குர்லா, மாதுங்கா மற்றும் தாதர் ஆகிய பகுதி கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன . இந்திய வானிலை ஆய்வு மையம் ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்திருந்ததால் மும் பையில் நேற்று பள் ளி, கல்லூரிகளு க்கு விடு முறை அளிக்கப்பட்டது.மேலும் கன மழை காரண மாக மும் பையில் நேற்று விமான சேவை பாதிக்கப்பட்டது.

ஜூன் 30-ம் தேதி செம்பூரில் பள்ளிப் பேருந்து மீ து மரம் விழுந்ததில் விஹான் ஸ்ரீவஸ்தவ் (11) என்ற மாணவன் உயிரிழந்தான் . இச்சம்பவத்தில் மேலும் 4 குழந்தைகள் காயமடைந்



தனர்.

ஜூலை 5-ம் தேதி ஆரே காலனி யில் மோட்டார் சைக்கிளில் சென்ற போது மரக்கிளை விழுந் த தில் ஹ ச ன் ரசா (18) உயி ரி ழ ந்தார். ஜூலை 6- ம் தேதி குர்லா மேற்கில் கடை ஒன்றின் மீது மரம் விழுந்ததில் யுனுஸ் குண்டா வாலா (63) உயிரிழந்தார். இவரது குடும்பத்துக்கு பிஎம்சி ரூ.5 லட்சம் நிவாரணம் அறிவித்துள்ளது.

மேற் குப் புறநகர்ப் பகுதி களில் அதிகபட்சமாக 448 மரங்களும், கிழக்குப் புறநகர்ப் பகுதிகளில் 340 மரங்களும், நகரப் பகுதியி ல் 3 36 ம ரங்களும் விழு ந் துள் ளன . திட்டமிடப்படாத கட்டுமானங் க ள் , மர ங்களி ன் வேர் க ளைச் சுற்றி கான்கிரீட் போடுவது மற்றும் முறையான பராமரிப்பின்மை ஆகி ய வையே மரங்கள் பல வீனமடை யக் காரணம் என நிபு ணர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.


இ ந்த வார ம் மேலும் ம ழை பெய் யக்கூடும் எ ன்ப தால் , வாகனங்களை மர ங் களின் அடியில் நி றுத்த வேண்டாம் எ ன்றும், சாய்ந்த மரங் கள் குறித்து உடனடியாக மாநகராட்சி க்குத் தெரிவி க்கு மாறும் அதிகாரி க ள் பொது மக் களைக் கே ட்டு க் கொ ண்டுள் ளனர். டெ ல்லியிலும் நேற்று கனமழை பெய் தது . இத னா ல் அங்கும் வி மான சே வைகள் பா திக்க ப்ப ட் டன. போக்கு வரத்தும் ஸ்தம்பித்தது.

# Ceasefire with Iran over, says Trump in big declaration at NATO Summit after US strikes

US President Donald Trump has announced that the ceasefire deal with Iran is "over." In a major statement at the NATO Summit 2026 in Ankara, Turkey, the US president said that negotiations with Tehran were a "waste of time."

Trump's remarks also come after the US launched fresh strikes against Iran on late Tuesday, reigniting tensions. In response, Iran launched fresh attacks on US military bases in Bahrain, Kuwait and other Gulf countries. Track LIVE updates here

At the press conference with NATO chief Mark Rutte, Trump's remarks came in response to the journalist who



asked if the ceasefire with Iran was "done" and the 14-point MoU was "dead."

"For me, I think it's over. I don't want to deal with the Iranians. They are scum, they are sick people. They are led by sick people and are vicious, violent people," said Trump in the live press conference.

"We attacked, very powerfully last night, the very dangerous people from Iran... There's something wrong with them. We say, 'Go and do your funeral stuff,' and instead of that, they start shooting rockets at ships yesterday. So we hit them very hard last night," Trump told reporters on the recent US strikes against Tehran.

While we wait for a comment from the Iranian regime and IRGC, fresh fighting erupted between the US and Tehran after Washington launched fresh strikes in the region.

In a statement from the US Central Command, Washington confirmed it carried out a new round of "offensive strikes" against Iran.

Also Read | Fresh US attack, Iran sanctions waiver lifted, a 'crushing' response warning: What is happening?

"US forces struck Iranian air defense systems, command and control networks, coastal radar sites, anti-ship missile capabilities, and more than 60 Islamic Revolutionary Guard Corps small boats in and near the strait to degrade Iran's ability to continue attacking international commerce flowing through the international trade corridor," said the CENTCOM statement.

As per the US, these attacks were a retaliation after Iran allegedly targeted three commercial vessels transiting the strait – Marshall Islands-flagged M/T Al Rekayyat, Saudi Arabia-flagged M/T Wedyan, and Liberian-flagged M/T Cyprus Prosperity.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.